முருகப்பெருமான் துணை

**மகான் நரசிங்கமுனைய நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.11.2023**, வெள்ளிக்கிழமை

1. கனகவேலாய் வந்த அரங்கா
கருணை வடிவாய் அருளுகின்ற
ஞான குருவே ஞானதேசிகா
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது துலை திங்கள்
குறைவிலா மூவையீர்திகதி புகர் வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 17ம் நாள், 03.11.2023, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க நரசிங்க முனைய நாயனார் யானும்
3. யானுரைக்க அரங்கன் திருவடி
உயர் ஞானத்திருவடியாக இருக்க
ஞானம் வேண்டி அலைபவர்கள்
நம்பிக்கை வைத்து அரங்கன் வழி
4. அரங்கன் வழி வந்து நன்கு
ஆற்றல் மிக்க திருவடிபணிந்து
வரங்கள் தா என வேண்டி
வடிவேலனாரின் சடாட்சர தீட்சை பெற
5. தீட்சைபெற தீவினை அகலும்
தீட்சைபெற ஞானத்தெளிவு
மாட்சிமைபட கண்டு இனிதே
மண்ணுலகில் ஞானவான்களாவர்
6. அவனியில் அரங்கன் உபதேசம்
ஆறுமுகனார் தரும் ஞானமாகும்
அவனியோர் பணிந்து ஏற்று
அதன்வழி கடைப்பிடித்துவர

7. வருகவே வருங்காலம் மாற்றம்
வளர்ச்சி வல்லமை குன்றா
தருமபலம் கொண்ட வாழ்வாக
தானென்ற ஆணவம் தலை தூக்கா

8. தலைதூக்கா அனைத்துமே
தவராஜன் குருவின் செயல் என
பிழைவாரா சரணாகதி கூடி
பெருந்தயவு கொண்ட மக்களாக

9. ஆகவே மாற்றம் கண்டு
அரங்கமகான் தேர்வு செய்த
மகான்களாகவேத் தேறி
மரணம் வெல்லும் சக்திகூடி

10. கூடியே கலியிடர்கள் தன்னை
குவலயம் விட்டு விரட்டி
தேடியே ஞானத் தலைமையை
தெய்வ ஞான ஆட்சியை

11. ஆட்சியை உலகினில் படைத்து
அமைப்பர் ஆன்மீக அரசியல் களம்
மீட்பர் பேருலகை ஆபத்திலிருந்து
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—